# அறநெறிப் பாடசாலைகளுக்கான
# பாடத்திட்டம்



வெளியீடு :

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு ஜூன் 1992

இரண்டாம் பதிப்பு ஜூலை 1993

மூன்றாம் பதிப்பு ஜூலை 1997

இலவச வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகளுக்கான
# பாடத்திட்டம்

வெளியீடு :
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் பல பாகங்களிலும் இந்துசமய அறநெறிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றை ஆலய பரிபாலனசபைகளும், இந்துசமய நிறுவனங்களும் ஊக்குவித்து நடாத்தி வருகின்றன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இப்பாடசாலைகளை நெறிப்படுத்தும் நோக்குடன் இலவச நூல்களை வெளியிடல், ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல், பண்ணிசை வகுப்புகளை ஒழுங்கு செய்தல் போன்ற பல பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அறநெறிப்பாடசாலைகளின் உயிர்நாடியாக அமைவது பாடத்திட்டமாகும். இப் பாடத்திட்டம், பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு கட்டமைப்பாக அமைந்து வழிநடத்துகின்றது. அத்துடன் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறந்ததொரு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது.

கடந்த சில ஆண்டுகளாக இந்து மக்கள் மத்தியில் அறநெறிப்பாடசாலைகள் பற்றிய விழிப்புணர்வு மேலோங்கி வருவதால் நாட்டின் பல பாகங்களிலும் புதிய பல பாடசாலைகள் தோன்றிவருகின்றன. அதன் காரணமாக அறநெறிப் பாடசாலைகள் பணிகளை திணைக்களம் மேலும் விரிவுபடுத்தி வருகின்றது. இதன் ஓர் அம்சமாகவே பாடத்திட்டம் மூன்றாவது பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

பல சமய அறிஞர்களாலும், கல்வியாளர்களினாலும் தொகுக்கப்பட்ட இப் பாடத்திட்டம் முறையே 1992, 1993ம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டது. மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இந்நூலை இவ்வாண்டு மீண்டும் வெளியிட்டு விநியோகிக்க இருப்பதில் மகிழ்வு கொள்கின்றது.

**திருமதி. இ. கைலாசநாதன்**
பதில்பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 2 |
| பாலர்பிரிவு (2ம், 3ம் ஆண்டுகள்) | 5 |
| கீழ்ப்பிரிவு (4ம், 5ம், 6ம் ஆண்டுகள்) | 9 |
| மத்தியபிரிவு (7ம், 8ம், 9ம் ஆண்டுகள்) | 12 |
| மேற்பிரிவு (10ம், 11ம் ஆண்டுகள்) | 16 |
| உசாத்துணை நூல்கள் | 19 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டம்

குறிக்கோள் :

1. வளரும் பருவத்திற்கேற்ப கற்றல் முயற்சி.

2. பாடசாலைச் சமய பாடத்திட்டத்திற்கு இது துணையாக அமைவதே நோக்கம்.

காலம் :

52 வாரங்கள்
52 ஞாயிறுகள்

காலை 9 மணி முதல் 12 மணி வரை
(மூன்று மணித்தியாலங்கள்)

52 x 3 = 156 மணித்தியாலங்கள்

1. பாலர் பிரிவு - 2ம், 3ம் ஆண்டுகள்

2. கீழ்ப்பிரிவு - 4ம், 5ம், 6ம் ஆண்டுகள்

3. மத்திய பிரிவு - 7ம், 8ம், 9ம் ஆண்டுகள்

4. மேற் பிரிவு - 10ம், 11ம் ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

புதிய புதிய வளர்ச்சிகளால் உலகம் மாறுதல் அடைந்து கொண்டிருக்கிறது. அந்த மாற்றங்களுக்கு மக்களும் ஈடு கொடுக்க வேண்டியவர்களாகின்றனர். மனித மனம், பரபரப்புக்கும், வேகத்துக்கும் உட்படுவதால் நல்லெண்ணங்கள் வாழ்வின் உயர் பண்புகள் என்பவற்றை இழக்க நேர்கிறது. இதற்கு எதிர் மாறாக பகைமை, தன்னலம், போட்டி, பொறாமை, பதவிமோகம் போன்ற எண்ணங்கள் வளர்ச்சி பெறுவதனால் சமூகத்தின் சமநிலை குலைகிறது. நாட்டின் ஒற்றுமையும் அமைதியும் நிலை தவறுகின்றன. பண்புகளைப் போற்றாத குறுகிய சிந்தனைகளும் பொருளாதாரக் கொள்கைகளுமே இத்தகைய நிலை ஏற்படுவதற்குப் பிரதானமான காரணமாகும். எனவே தான், இளமையிலேயே மனங்களைப் பண்படுத்தச் செய்கின்ற ஒழுக்க வாழ்வோடிணைந்த சமயக் கல்வியைப் போதிப்பது அவசியமாகின்றது.

பிள்ளைகளே நாளைய உலகினை வழி நடத்திச் செல்ல உள்ள செல்வங்கள். சமூகத்தின் உயர் பண்புகளையும், சமாதானத்தையும் அவர்களே நிர்ணயிப்பார்கள். ஆதலின் அவர்களைத் தகுந்த முறையில் வளர்ப்பதும், அவர்களுக்குரிய பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்த்தி வைப்பதும் பெரியோர்களின் பணி ஆகின்றது.

எமது நாட்டில் கல்வி அமைச்சு சமய பாடத்தை கட்டாய பாடமாக்கி உள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தத்தம் சமய நெறிகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆயினும் சமய பாடமும் ஏனைய பாடங்களைப் போல அறிவையும் பரீட்சையையும் குறிக்கோளாகக் கொண்டே போதிக்கப்படுகிறது. இதன் விளைவாக பிள்ளைகளின் மனநிலையிலோ அல்லது வாழ்விலோ சமயம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும், குறிப்பாக இன்று எமது நாட்டில் இளைஞர் மத்தியில் காணப்படும் முரண்பாடான சிந்தனைகளுக்கு இதுவே ஒரு காரணமென்றும் 1990ம் ஆண்டில் வெளியான இளைஞர் ஆணைக்குழு அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

சமய போதனை என்பது அறிவாக இல்லாமல், வாழ்க்கையோடு பிணைந்த நெறியாக அமைய வேண்டும். உயர்ந்த எண்ணங்களுக்கு வழி சமைக்க வேண்டும். வெளிப்படையாக அமைகின்ற கிரியைகளுக்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்கும் மேலாக மனத்தூய்மையை வளர்ப்பதாக அமைய வேண்டும். அத்துடன் உயர்ந்த பண்புகளான அன்பு, நேர்மை, இன்சொல், பொறுமை, சேவை, தியாகம், கூட்டுறவு போன்றவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரச் செய்ய வேண்டும். நற் பண்புகளை வளர்ப்பதோடு தீமையும், துன்பமும் தருகின்ற சிந்தனைகளைக் கட்டுப்படுத்தி, வாழ்வை நெறி செய்வதே சமய போதனையின் பிரதான அம்சமாகின்றது.

பாடசாலையில் வழங்கப்படும் சமயக் கல்வி இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றவில்லை. அத்துடன் பரீட்சையும், போட்டியும், சமூக ஒற்றுமைக்கு மாறான பண்புகளையே வளர்த்து விடுகின்றன. எனவே பாடசாலைகளால் முழுமைப்படுத்த முடியாத இப்பணிகளை அறநெறிப் பாடசாலைகள் பொறுப்பேற்கின்றன. உண்மையில் இந் நோக்கங்களைச் செயற்படுத்த அறநெறிப் பாடசாலைகளே சிறந்த நிலையங்களும் ஆகும்.

ஏனெனில் :

1. இப்பாடசாலைகள் பரீட்சையை நோக்கமாகக் கொண்டவையல்ல.

2. பெற்றோர்களும் இவற்றின் அவசியத்தை உணர்ந்து தம் பிள்ளைகளை இங்கு அனுப்புகின்றனர்.

3. ஆசிரியர்களும் சேவை மனப்பான்மையுடன் சன்மானத்தை எதிர்பார்க்காது பணிபுரிகின்றனர்.

எல்லாப் பிள்ளைகளுக்கும் படித்துப் பட்டம் பெறக்கூடிய ஆற்றல்கள் இல்லா விட்டாலும், நல்லவர்களாக வரும் இயல்புகள் உண்டு. இந்த இயல்புகளை மலரச்செய்வதற்கு போட்டியோ பணமோ அவசியமில்லை. ஆர்வமும் விடா முயற்சியும் மனத்திடமுமே இன்றியமையாதவை. இதற்கு மாணவர்களது தனிப்பட்ட முயற்சி அவசியம். இந்த தனிமுயற்சியை உருவாக்கும் பொறுப்பு அறநெறிப் பாடசாலைகளைச் சாரும். அறநெறிப் பாடசாலைகளுக்கான இப் புதிய பாடத்திட்டம் இந்த நோக்கத்தினை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் கால எல்லையும் நோக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது வாரத்திலொருநாள் 9 மணி முதல் 12 மணி வரை மூன்று மணித்தியாலங்கள், வருடத்தில் 156 மணித்தியாலங்கள் வரலாம் என்று கருதப்பட்டது. இந்தப் பொன்னான நேரத்தை உச்ச பயன் பெறக்கூடிய வகையில் பயன் படுத்துவது அவசியமாகும். எனவே பொருத்தமான சூழலை ஏற்படுத்தி அனுபவம் மூலமும், செயல்முறையிலும் அறிவை வளர்ப்பதற்குத் தகுந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை உருவாக்குவதே இப்பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே, ஆசிரியர்கள் தாமும் உதாரணமாக இருப்பதுடன், ஊக்குவிப்பாளர்களாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டிகளாகவும், அன்பு நிறைந்த உள்ளங்களுடன் பிள்ளைகளின் சிந்தனை, உணர்வு ஆகியவற்றைத் தூண்டி மனதைப்பண்படுத்தி நல்லெண்ணமுள்ள நல்லவர்களாக நடக்க வழிவகுப்பது அவசியமாகும்.

இப்பாடத்திட்டத்தல் நான்கு பிரிவுகள் உள.

1. பாலர் பிரிவு - 2ம், 3ம் ஆண்டுகள்
2. கீழ்ப்பிரிவு - 4ம், 5ம், 6ம் ஆண்டுகள்
3. மத்திய பிரிவு - 7ம், 8ம், 9ம் ஆண்டுகள்
4. மேற் பிரிவு - 10ம், 11ம் ஆண்டுகள்

ஒவ்வொரு பிரிவிற்கும்,

1. ஓர் இலக்கு
2. அதனை அடைவதற்கு குறித்த நோக்கங்கள்
3. அதற்கு துணையாகப் பாடப் பொருள்
4. கற்பித்தல் முறைகள்
5. மதிப்பீடுகள்-இலக்கை அடைகிறோமா என்று அளப்பதற்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்கள் தத்தம் மாணவர்களுக்கு ஏற்ற செயற்பாடுகளைச் சேர்த்து அவர்களுக்கு ஆர்வத்தையும், ஊக்கங்களையும் ஊட்டி அவர்களிடம் இயற்கையாகவுள்ள உயர்ந்த பண்புகளை இயங்கச் செய்தல் அவசியமாகும். இதற்கு வீடும், பாடசாலையும் ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**திருமதி. பூமணி குலசிங்கம்**
கல்வித்துறை விரிவுரையாளர்
பல்கலைக் கழகம், கொழும்பு.

**வழிகாட்டி :**

*சில சமயங்களில் அறிவு நமக்கு வழி காட்டுவதில்லை, அப்போது நமது நம்பிக்கையே வழிகாட்டுகிறது. ஆகவே நம்பிக்கை அறிவிற்கு முரண்பாடானதல்ல, அறிவிற்கும் அப்பாற்பட்டது. அறிவு நம்மைக் கைவிடும் பொழுது நம்பிக்கை நமக்கு உதவுகிறது.*

~ **மகாத்மா காந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பிரிவு (2ம், 3ம் ஆண்டுகள்)

## 1. இலக்கு / பொது நோக்கம்

அன்பு நெறியினை வளர்த்தல்.

## 2. குறித்த நோக்கம்

1. அன்பின் வடிவமே பெற்றார் என்று அறிதல்.
2. பெற்றார்களுக்கும், மூத்தோர்களுக்கும் மதிப்பைக் கொடுக்கத் தெரிந்து கொள்ளல்.
3. தம் கடமைகளை சுகாதாரம் உட்பட விளங்கிச் செயற்படல்.
4. கடவுள் நம்பிக்கையை வளர்த்தல்.
5. இறைவனை மனதில் இருத்தி உணர்வுடனும், பண்புடனும் தேவாரம் பாடல்.
6. ஜீவகாருண்ய மனப்பாங்கை உருவாக்கல், அவ்வகையில் சேவை செய்யப் பழகல்.
7. வீட்டில் இறைவழிபாட்டை மேற்கொள்ளல், கூட்டு வழிபாட்டு முறையை உருவாக்கல் (தாய், தந்தை, சகோதரர், சுற்றம், சூழல்)

## 3. பாடப் பொருள்

**1. அன்பு**

1.01. அப்பா, அம்மா, சகோதரர் கட்டுப்பட்ட குடும்பம்.

1.02. பெற்றோரை வழிபட்டு ஆசிபெறல்.

1.03. முதியோர் மதிப்பைப் பேணல்.

1.04. தமது கடமைகளை விளங்க வைத்தல்.

1.05. அன்பைப் புலப்படுத்தும் கதைகள்.
அன்பின் கூறுகளை வெளிப்படுத்தக்கூடிய கதைகள் – தாய் அன்பு, சகோதர அன்பு, பிள்ளைகளில் பெற்றாருக்குரிய அன்பு, ஆசிரியர் குருவிடத்தில் அன்பு, மிருகங்கள், உயிரினங்கள் பால் அன்பு, (கொடுத்தல், சுயநலமில்லாத அன்பு தியாகம், சேவை)

1.06. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடல்களை மனனம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. அன்புநெறி கடவுள் நெறி**

2.01. அன்பின் வடிவமே இறைவன் ~ இதை உணர்த்தும் கதைகள்.

2.02. இறைவன் எல்லா உயிர்களையும் காப்பவர்.
பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை.
திருவிளையாடற் புராணத்தில் வரும் தாயுமானவர் கதை, பூனைக்குட்டிக் கதை.
வேறு அன்பு நெறி காட்டும் கதைகள்.

2.03. இறைவனின் தோற்றம்
குருடன் யானையின் உருவத்தை விளக்கிய கதை போன்றவை.
வேறு கதைகளும்.

**3. அன்பின் வழிவருவது தருமம், அறம், சேவை**

3.01. பெற்றார் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமை.

3.02. பிள்ளைகள் செய்ய வேண்டிய அறம்.
இன்சொல் கூறல், நன்றி செலுத்தல், இரக்கம், நினைவு கூரல், பகிர்தல், ஏனையோரை இன்புறச் செய்தல்.

3.03. தர்மம், வாய்மை, விருந்தோம்பல், ஈகை, கொல்லாமை என்பவைகளை உணர்த்தும் அறநெறிக் கதைகள்.

3.04. அறநெறி உணர்த்தும் பாடல்கள்.
வாக்குண்டாம்
பாரதியார் பாடல்கள்
மூதுரை

**4. வீட்டில் வழிபாடு**

4.01. இறை படங்கள்

4.02. தூபதீபம், திருநீறு

4.03. புஸ்பாஞ்சலி, மலர்மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.04 தேவாரம், புராணம் ஒன்று, இலகுவான திருப்புகழ் ஒன்று, நாமாவளி (பொருத்தமானவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்)

**5. தெய்வங்களும் அவற்றிற்குரிய விரதங்களும்**

5.01. சிவராத்திரி, கந்தசஷ்டி, நவராத்திரி.

5.02. விநாயக சதுர்த்தி, ஆவணி ஞாயிறு, வைகுண்ட ஏகாதசி, விநாயக சஷ்டி.

5.03. விரதங்களின் நோக்கம் பற்றி வலியுறுத்தல் அவசியம்.

**6. சமூக விழுமியங்கள்**

6.01. நல்வழி, நன்னெறி, மூதுரை.

6.02. திருக்குறள்
கடவுள் வாழ்த்து
சத்தியம்
கொல்லாமை
புலால் மறுத்தல்

6.03. விளக்கி மனனம் செய்தல்.

6.04. அதன்படி வழித்தூண்டல்.
உதாரணங்களுடனும், கதை மூலமும் விளக்கல்.

## 4. கற்பித்தல் முறைகள்

1. அமைதியாக இருத்தல்.
2. படங்களுடன் விளக்கினால் மாணவர்களுக்கு எளிதாக விளங்கும்.
3. கலந்துரையாடல்
   மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டுப் பின் உரையாடல் சுய கருத்துக்களுக்கு இடம் அளித்தல்.
4. மனனம் செய்ததைப் பண்ணுடன் பாடல்
   கோயிலுக்கு மாணவர்களுடன் சென்று விளக்கல்
5. பூஜைகள், திருத்தலங்கள்
6. பேச்சுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஒழுக்கப் பயிற்சிகள்
சமய செயற்பாடுகளில் கூட்டாக இயங்குதல்.

8. பாத்திரக்கோலங்களாக நடித்தல்.

## 5. மதிப்பீடு

1. சிறு வினாக்கள்

2. தேவாரம் பாடல், மதிப்பிடுதல் (மாணவர்களே மதிப்பிடல், பண்ணிசை)

3. பேச்சுப் போட்டிகள்

4. சேவை முயற்சிகளை மதிப்பிடல்

5. மனப்பாங்குப் பரீட்சை

**இலட்சிய மனிதன்!**

தனிமையிலும் மௌனத்திலும் எவன் விறுவிறுப்பான செயலைக் காண்கிறானோ எவன் சுறுசுறுப்பான செயலின் நடுவில் தனிமையையும் மௌனத்தையும் காண்கிறானோ, அவனே இலட்சிய மனிதன். அவன் தன்னடகத்தின் இரகசியத்தை அறிந்துள்ளான். அவன் தன்னையே கட்டுப்படுத்தியுள்ளான்.

—சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்ப்பிரிவு (4, 5, 6ம் ஆண்டுகள்)

## 1. இலக்கு / பொது நோக்கம்

ஆலய வழிபாடும் அதன் பயன் நன்னடத்தை வளர்ச்சி என்பதை அறிதல்.

## 2. குறித்த நோக்கம்

1. ஆலய அமைப்பையும், வழிபடும் முறையையும் அறிந்து கொள்ளல்.
2. நித்திய பூசைகள், திருவிழாக்கள் பற்றிய அறிவு பெறுதல்.
3. ஈழத்துத் திருத்தலங்களை அறிதல்.
4. நான்கு நாயன்மார் வரலாற்றையும் அறிதல் (ஆலயத் தொடர்புகளுடன்)
5. அவர்கள் மனம் கசிந்து பாடிய தேவாரங்களில் சிலவற்றை மனனம் செய்து பாடப் பழகுதல்.
6. விரதங்களையும் கிரியைகளையும் விளக்கி, அதனால் பிறப்பது மன அடக்கம் மனக்கட்டுப்பாடு, மனமொருநிலைப்படல், மனஅமைதி என்பதை உணர்தல்.
7. சிந்தை, சொல், செயல் மூலம் நல்லொழுக்க நெறியினைப் பேணத் தெரிதல்.

## 3. பொருளடக்கம்

1. **ஆலயம்** – பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பற்றி சுருக்கமாகக் கூறல்.

1.01. ஆலய அமைப்பு – சுருக்கமாகக் கூறல்.

1.02. தெய்வங்கள் – பல தெய்வத்தை வழிபட்டாலும் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படை மனதில் பதியுமாறு மாணவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.

அறுவகை சமயம் பற்றி விளக்கி யாவற்றிலும் ஒருமையைக் காணும் மனநிலையை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.03. இறைவனை வழிபடும் முறை

பஞ்சாங்க, அஷ்டாங்க நமஸ்காரத்தை விளக்கி, செய்முறையில் செய்து காட்டி சாதனை முறையை (தன்னைத் தானே அறிதல்) பழக்கத்தில் கொண்டு வருதல்.

1.04. மாணவர்களிடையே மனக்கட்டுப்பாடு, மனஅமைதி, மனஒருமை நிலைப்படல், அன்பு நெறி, தூய்மை, தருமம் என்பவற்றை வளர்த்தல். அதன் மூலம் தெய்வீக நிலையை உணர வைத்தல்.

**2. பூசைகள்** 1. ஆகமமுறையுடன் கூடிய பூசைகள் வழிபாட்டு முறைகள்.

2. ஆகமமுறை சாரா வழிபாட்டுமுறை, உ-ம் (செல்வச்சந்நிதி, மண்டூர், கதிர்காமம்)

2.01. நித்திய பூசையுடன், நைமித்திய பூசையும் சொல்லி சிறு விளக்கம் கொடுத்தல். (பொருள் தெளிவுபடுத்தல் போதுமானது)

2.02. திருவிழாக்கள் பற்றி அறிதல், பார்வையிடல், பங்குபெறல். (பிரசித்தி பெற்ற திருவிழாக்களும், அப்பிரதேச சுற்றாடலில் உள்ள திருக் கோயில்களில் நடக்கும் திருவிழாக்கள்)

**3. ஈழத்துத் திருக்கோயில்கள், தமிழகத்து திருக்கோயில்கள் பற்றி.**
(பிரசித்தி பெற்ற ஸ்தலங்கள்)

3.01. சிவன் கோயில்கள்

பாடல் பெற்ற சிவன் கோயில்கள், ஏனைய சிவன் கோயில்கள்.

3.02. விநாயகர் கோயில்கள்

3.03. முருகன் கோயில்கள்

3.04. அம்மன் கோயில்கள்

3.05. விஷ்ணு கோயில்கள்

(அச்சூழலிலுள்ள ஆலயங்கள் பற்றி ஓரளவு தெரியப்படுத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. அகச்சுத்தம் புறச்சுத்தம்**

4.01. புறச்சுத்தத்தைப் பேணுவது அவசியம் என்பதை விளக்கல்.

4.02. அகச்சுத்தம் – நன்நடத்தைக்கு வழிவகுக்கும் என்பதை கதைகள் மூலம் விளக்கல்.

4.03. உணவுகள் பற்றிய அறிவு.

4.04. ஆலய வழிபாடு – பெற்றாருடன் செல்லல்.

**5. வீட்டில் திருநாட்கள்**

5.01. தைப்பொங்கல், பட்டிப் பொங்கல்.

5.02. சித்திரை வருடப் பிறப்பு.

5.03. ஆடிப் பிறப்பு.

5.04. தீபாவளி.

5.05. கார்த்திகைத் தீபம்.

ஆசிரியர் மாணவர்களின் நடத்தையிலும், மனப்பாங்கிலும் இத்திருநாட்கள் ஏற்படுத்தும் செல்வாக்கினைப் புலப்படுத்தும் அனுபவங்களை வெளிக் கொணர்தல்.

## 4. கற்பிக்கும் முறை

1. அமைதியாயிருத்தல்.
2. கலந்துரையாடல்.
3. விழுமியங்களை மாணவர்கள் தாமே எவ்வளவிற்குத் தமதாக்கிக் கொண்டனர் என மதிப்பீடு செய்தல்.
4. கதைகள் கூறல் – மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்தல்.
5. தேவாரம் பண்ணுடன் பாடல் மனனம், பாவனை.
6. பேச்சு.
7. மாணவனைக் கதை சொல்ல வைத்தல், குழுமுறைச் செயற்பாடுகள்.

## 5. மதிப்பீடு

1. சிறு வினாக்கள்.
2. கதை கூறல்.
3. தேவாரம் மனனம் செய்து பாடல் – கொன்றைவேந்தன், ஆத்திசூடி.
4. மாணவர் செயல்களை மதிப்பிடல்.
5. மனப்பாங்கு பரீட்சை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய பிரிவு (7ம், 8ம், 9ம் ஆண்டுகள்)

## 1. இலக்கு / பொது நோக்கம்

ஆளுமை விருத்திக்கு சமயம் அடிகோலும் என்பதைப் புரிந்து கொள்ளல்.

## 2. குறித்த நோக்கம்

1. மனத்தின் முக்கியத்துவத்தினை விளக்கல்.
2. வழிபாட்டின் மூலம் உள்ளுணர்வுகளைப் பக்குவப்படுத்தலாம் என்பதை உணர்த்தல்.
3. இறை வழிபாடு நன்னடத்தைக்கு வழிகோலுகின்றதென்பதை விளக்குதல்.
4. சைவசித்தாந்தம், முப்பொருள்கள், மும்மலம் பற்றி விளங்கிக் கொள்ளுதல்.
5. சைவ நாற்பாதங்கள் பற்றி அறிதல்.
6. ஈழத்துச் சைவப் பெரியார்களையும், அவர்களின் தொண்டினையும் விளக்கிக் கூறல்.
7. இராமகிருஷ்ண பரமகம்சர், விவேகானந்தர் கருத்துக்களை அறிந்து கொள்ளல், அன்பே சேவையென்பதை விளக்குதல்.
8. சேவை முயற்சிகளில் ஈடுபடுதல்.

## 3. பொருளடக்கம்

### 1. ஆலய வழிபாடு

1.01. வழிபாட்டு முறைகளை விளக்கல், அதன்பின் அவ்வாறு ஒழுகல்.

1.02. வழிபாட்டின் குறிக்கோளைத் தெளிவுபடுத்தல்.

1.03. நித்திய பூஜைகள், நைமித்திய பூஜை, காமிய பூஜை, மகேஸ்வர பூஜை, குருபூஜைகள் இவற்றின் விளக்கம்.

### 2. சைவசித்தாந்தம்

2.01. முப்பொருள்கள், மும்மலங்கள் பற்றிய தெளிவு

2.02. சிவசின்னங்கள் பற்றிய அறிவு (திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்)

2.03. நாயன்மார் வரலாறு
(கதைகள் மூலம் விளக்கம்)

2.04. திருநீற்றுப் பதிகம், சிவபுராணம், பஞ்ச புராணம் விளக்கம்.
(மனனம் செய்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. நாற்பாதங்கள்

3.01. தாச மார்க்கம் - அப்பர் (சரியை)

3.02. சற்புத்திரமார்க்கம் - சம்பந்தர் (கிரியை)

3.03. சக மார்க்கம் - சுந்தரர் (யோகம்)

3.04. சன் மார்க்கம் - மாணிக்கவாசகர் (ஞானம்)

3.05. அறுபத்தி மூன்று நாயன்மார்கள் வரலாறு மேலோட்டமாக அறிதல்.

3.06. திருமுறை தொகுப்பு வரலாறு

### 4. தற்கால சமயப் பெரியார்கள்

4.01. ஈழத்துச் சைவப் பெரியார்கள், இவர்கள் வாழ்க்கையிலிருந்து அறிவது யாது?

4.02. இராமகிருஷ்ணர், விவேகானந்தர் காட்டிய பாதை - அன்பே சேவை.

4.03. ஆன்மீகக் கதைகள் - இராமகிருஷ்ண பரமஹம்சர்

4.04. பிற சமயப் பெரியார்கள்
(புத்தர், யேசு, நபி [அன்பே சேவை])

### 5. சடங்குகள், விழாக்கள், கிரியைகள்

5.01. தைப்பொங்கல், புதுவருடம், ஆடிப்பிறப்பு, தீபாவளி, கார்த்திகைத்தீபம்

5.02. 31ம் நாள், ஏடு தொடக்கல், பூப்பு நீராட்டு விழா, விவாகம், புதுமனை புகல்.

5.03. பிறசமய விழாக்கள்

### 6. சில பொது விரதங்கள்

6.01. பொது நோக்கம்

இறை நம்பிக்கை, மனக்கட்டுப்பாடு, மனம் ஒருநிலைப்படுத்தல், சிந்தனை பேச்சு நடத்தை சீராக்கும்.

6.02. கௌரி விரதம், திருவெம்பாவை

6.03. பௌர்ணமி, அமாவாசை, ஏகாதசி விளக்கம் நோக்கங்களுடன் வேறு விரும்பியவற்றைச் சேர்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. சில புராணக்கதைகளும், தத்துவ விளக்கமும்**

7.01. இதிகாச புராணக் கதைகளும், தத்துவ விளக்கமும்

7.02. இதிகாசம் - இராமாயணம்
மகாபாரதம்

7.03. புராணம் - திருவிளையாடல்
தசாவதாரம்

**8. தேவாரம் மனனம் பண்ணுடன் பாடல்**

8.01. திருமுறைகளிலிருந்து தெரிவு செய்தல்

8.02. திருக்குறளில் - அறம் வலியுறுத்தல் - அன்புடமை
ஒழுக்கமுடைமை
வாய்மை

**4. கற்பித்தல் முறை**

1. அமைதியாயிருத்தல்
2. கலந்துரையாடல்
   மாணவர்களிடமிருந்து வினாக்கள் மூலம் கருத்துக்களைப் பெற்று அவர்களுடன் கலந்துரையாடல்.
3. உதாரணங்களுடன் விளக்க விரிவுரை
4. பேச்சு - சுய கருத்துக்கள்
5. பாத்திரக் கோலங்களாக நடித்தல்
6. தேவாரங்கள் பண்ணுடன் பாடல்
7. விழாக்கள் பண்டிகைகளில் பங்குபெறுவதன் மூலம் அறிவு
8. சேவைப் பயிற்சி அனுபவம் - செயற்பாடுகள்
   சிரமதானம், அகதிமுகாம் நிவாரண முயற்சிகள், அனாதை இல்லம், வயோதிபர் இல்லம், மனநோயாளர் மருத்துவ நிலையம், மருத்துவ நிலையம்.................... போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மதிப்பீடு

1. சிறு வினாக்கள்
2. ஆக்கபூர்வமான கட்டுரைகள்
3. பேச்சுப் போட்டி – மாணவர்களே தம்மை மதிப்பீடு செய்தல்
4. செயல் மதிப்பீடு – அலங்காரம், கோலம், மலர்மாலை சேவை முயற்சிகள்
5. மனப்பாங்கு பரீட்சை

பிரார்த்தனையால் நிச்சயம் பயனுண்டு. மனமும் வாக்கும் ஒன்று சேர்ந்து ஊக்கத்தோடும், நம்பிக்கையோடும் ஒரு பொருளை பிரார்த்தித்துக் கேட்போமானால் நிச்சயம் பலன் உண்டு.

"ஈஸ்வரா இவையெல்லாம் உன்னுடையவை" என்று வாயால் மட்டும் சொல்லி, அவையெல்லாம் தன்னுடையவை என்று மனதால் நினைக்கிறவனுடைய பிரார்த்தனைக்குப் பலனிருக்காது. வாய்விட்டு உரக்கத்தான் பிரார்த்திக்க வேண்டும் என்பதில்லை. நமது மனத்தின் குரலும் அவனுக்குக் கேட்கும். எறும்பின் காலடி சப்தம் கூட இறைவனின் காதுகளில் விழும்.

– ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்பிரிவு (10ம், 11ம் ஆண்டுகள்)

### 1. இலக்கு / பொது நோக்கம்

சமயம் ஓர் வாழ்க்கைமுறை என்பதை அறிதலும், அதனை வாழ்வில் கைக் கொள்ளலும்.

### 2. குறித்த நோக்கம்

1. ஆதிகாலம் தொட்டு சமயம் பிரதான இடத்தை வகித்தமை பற்றி அறிதல்.
2. சமயத்தை வளர்த்த பெரியாரை அறிதல்.
3. அறுவகை சமயம் ~ விளக்குதல்.
4. பிற சமயங்களைப் பற்றியும் தெரிதல்.
5. சமய நூல்கள் பற்றிய அறிவு.
6. உலகியல் வாழ்க்கையில் ஆன்மீகப் பண்பின் அவசியத்தை உணர்த்துதல்.
7. மனவெழுச்சிகளைப் பண்படுத்தல்.
   மன அமைதி, மனம் ஒருமைப்படல், மனத்திடம்.
8. வழிகாட்டலின் தேவையை உணர்தல்.

### 3. பொருளடக்கம்

**1. சமயம் தொன்மையானதென்பதை அறிதல்**

1.01. சிந்துவெளி நாகரிகம்

1.02. வேதகாலம், சங்ககாலம்

1.03. இந்துசமயம் ~ அறுவகைச் சமயம்

1.04. சித்தர் மரபு

**2. இந்து சமயத்தை வளர்த்தவர்கள்**

2.01. பெரியபுராணம் தரும் 63 நாயன்மார்கள்

2.02. ஆழ்வார்களும் / ஆசாரியார்களும், திருக்கைலாயபரம்பரையினரும், சந்தான குரவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. சமய இலக்கியங்கள்**

திருமுறைகள்
திருவருட்பயன்
நாலடியார்
திருக்குறள்

**புராணங்கள் பற்றிய பொதுவான அறிவு**

கந்தபுராணம் (சிறப்பாகத் திருப்பெருவடிவப் படலம்)
பெரியபுராணம் (தடுத்தாட் கொண்ட படலம்)

**4. தத்துவம்**

4.01. சற்காரியவாதம்
4.02. முப்பொருள், மும்மலம்
4.03. குருலிங்க, சங்கம வழிபாடு, தீட்சை, நாற்பாதங்கள்

**5. 19ம், 20ம் நூற்றாண்டில் சமயம்**

5.01. பெரியார்கள் – இராமகிருஷ்ண பரமஹம்சர்
5.02. விவேகானந்தர்
5.03. காந்தியடிகள்
5.04. ஆறுமுகநாவலர்
5.05. யோகர் சுவாமிகள்
5.06. விபுலானந்த அடிகள்

**6. பிறசமயங்கள் பற்றி அறிதல்**

6.01. பௌத்தம்
6.02. இஸ்லாம்
6.03. கிறிஸ்தவம்
சமயம், வழிபாட்டுமுறை, விழாக்கள், திருநாட்கள் பற்றிய அறிவு.

**7. வழிபாடும் இறை நம்பிக்கையும்**

7.01. வீடு
7.02. ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.03. விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் தத்துவ விளக்கங்களுடன்
7.04. பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, தியானம்

8. வழிகாட்டலும் சமூகப் பெறுமானங்களும்

8.01. பெரியோர்கள் வழிகாட்டல் தேவை என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
8.02. பெரியோர் கருத்துக்களை மதிக்கப்பழகுதல்
8.03. சமூகப்பெறுமானங்களை புருடார்த்தங்களுடன் தொடர்பு படுத்தி விளக்குதல்.
8.04. திருக்குறள்

## 4. கற்பித்தல் முறைகள்

1. அமைதியாய் இருத்தல் / தியானம்
2. கலந்துரையாடல்
3. விளக்க அறிவுரை – உதாரணங்களுடன்
4. பூஜைகள், விழாக்கள்
5. திருத்தலங்கள் (படங்கள், யாத்திரை)
6. பேச்சு
7. ஆக்கக் கட்டுரைகள், நாடகங்கள் எழுதல்
8. செயல்முறை கற்றல்
9. நடித்தல்
10. பண்ணுடன் தேவாரம் பாடல்
11. குழுமுறை செயல்முறைகள்

## 5. மதிப்பீடு

1. கட்டுரை வினா
2. சிறுவினா
3. பேச்சுப்போட்டி
4. கட்டுரைப் போட்டி
5. செயல் மதிப்பீடுகள் – அலங்காரம், கோலம், மலர்மாலை
6. சேவை முயற்சி மதிப்பீடு – மாணாக்கர்களே மதிப்பிடல்
7. மனப்பாங்கு மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

1. திருக்குறள்
2. ஆத்திசூடி
3. கொன்றை வேந்தன்
4. நல்வழி
5. நன்நெறி
6. நாலடியார்
7. நல் வழிச் சிறுகதைகள் - நாரா நாச்சியப்பன்
   பாகம் ஒன்று, இரண்டு, மூன்று
8. இராமகிருஷ்ணர் சொன்ன கதைகள் - சுவாமி சிற்பவானந்தர்
9. பக்திக் கதைகள் - சுவாமி கமலானந்தர்
10. உபநிடதக் கதைகள்
11. அறநெறிக் கதைகள் - சுவாமி கமலானந்தர்
12. கீதை சொல்லும் பாதை - சுவாமி விவேகானந்தர்
13. மூதுரை - ஔவையார்
14. நல்வழி - 1 - 4ம் வகுப்புகளுக்கு
    சுவாமி ராகவேசானந்தர் - பாகம் ஒன்று, இரண்டு, மூன்று
15. குழந்தைகளுக்கான சமயபாடங்கள் - சுவாமி ராகவேசானந்தர்
    பாகம் ஒன்று, இரண்டு
16. மகாபாரதக் கதைகள்
17. இராமன் கதை
18. சைவ சமய பாடப் புத்தகம் 1 - 8
19. சிவதத்துவம் - சுவாமி சிற்பவானந்தர்
20. சத்தி தத்துவம் - சுவாமி சிற்பவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கடவுளின் வடிவங்கள் – சுவாமி சிற்பவானந்தர்

22. திருமூலர் தவ மொழி – ராஜாஜி சோமு

23. சமயக் குரவர், சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம் –
பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தபிள்ளை

24. எண்ணங்கள் – டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

25. காந்தி அடிகள் கண்ட கடவுளும் சமயமும் – வீ. சேரத்தையாபிள்ளை

26. சமயநெறியும், மனித வாழ்க்கையும் – தமிழ் நாட்டு காந்தி நினைவுதினப் பதிப்பு

27. எமது வாழ்வும் பணியும் – சுவாமி சிற்பவானந்தர்

28. எமது குருநாதர் – சுவாமி சிற்பவானந்தர்

29. மகாத்துமா காந்தி – தமிழ்நாட்டு காந்தி நினைவுப் பதிப்பு, மதுரை.

30. அர்த்தமுள்ள இந்துமதம்

31. இந்து சமய பாடம் – பண்டிதர் வேந்தனார்

32. இந்து சமய பாடத்திரட்டு

33. நாயன்மார் கதைகள் – கி. வா. ஜகந்நாதன்

34. சைவமும் நாமும் – எஸ். தில்லைநாதன்

35. சைவ போதம் – 1ம் 2ம் புத்தகம் சு. சிவபாதசுந்தரம்

36. சிந்தனைக் களஞ்சியம் – பண்டிதமணி கணபதிப்பிள்ளை

37. சமயக் கட்டுரைகள் – பண்டிதமணி கணபதிப்பிள்ளை

38. தெய்வத்தின் குரல் – காஞ்சிப் பெரியவர்

39. நற்சிந்தனை – யோகர் சுவாமிகள்

40. சிவனருட் செல்வர் – திருமுருக கிருபானந்தவாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்ட ஆலோசகர் குழு

சுவாமி ஆத்மகனானந்தாஜி

பேராசிரியர். பொ. பூலோகசிங்கம்

திரு. வ. சிவராஜசிங்கம்

திருமதி. வசந்தா வைத்தியநாதன்

திரு. பெ. கணநாதபிள்ளை

திரு. வி. சண்முகசர்மா

செல்வி. பி. ஆறுமுகம்

திரு. வீ. ஆறுமுகம்

திருமதி. சாந்தி நாவுக்கரசன்

திரு. வீ. விக்கிரமராஜா

திரு. குமார்வடிவேல்

திரு. என். சோமகாந்தன்

திரு. எஸ். தெய்வநாயகம்

திருமதி. ஜீ. ஞானசேகரஐயர்

வைத்திய கலாநிதி. ஜெகந்நாதன்

திரு. எஸ். நவரத்தினசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு செய்யப்பட்ட அறநெறிப்பாடசாலைகளின் விபரம்

| மாவட்டம் | அறநெறிப் பாடசாலைகளின் தொகை | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|
| கொழும்பு | 34 | 6,198 | 222 |
| அம்பாறை | 67 | 11,602 | 440 |
| மட்டக்களப்பு | 95 | 20,324 | 688 |
| கண்டி | 68 | 11,308 | 257 |
| நுவரெலியா | 39 | 4,491 | 148 |
| கேகாலை | 21 | 1,199 | 63 |
| பதுளை | 52 | 6,683 | 172 |
| வவுனியா | 19 | 1,168 | 45 |
| புத்தளம் | 17 | 1,494 | 65 |
| கம்பஹா | 04 | 543 | 26 |
| திருகோணமலை | 46 | 4,936 | 199 |
| இரத்தினபுரி | 29 | 4,345 | 98 |
| மாத்தளை | 22 | 1,286 | 101 |
| யாழ்ப்பாணம் | 29 | 3,648 | 146 |
| கிளிநொச்சி | 02 | 176 | 06 |
| முல்லைத்தீவு | 04 | 509 | 14 |
| களுத்துறை | 32 | 2,878 | 100 |
| குருநாகல் | 04 | 288 | 09 |
| அநுராதபுரம் | 01 | 65 | 02 |
| மொனராகலை | 03 | 296 | 08 |
| காலி | 02 | 126 | 02 |
| மன்னார் | 02 | 351 | 14 |
| **மொத்தம்** | **592** | **83,914** | **2,852** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New Rajan Print, 25 Kew Lane, Colombo - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org